அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல:09/96

அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு.7
1996, மார்ச் மாதம் 20 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

## அரச ஊழியர்களுக்கு மாதாந்தம் இடைக்காலப்படி வழங்கல்.

1994.07.01 ஆந் திகதிக்குப் பின் எதுவித சம்பள அதிகரிப்பும் பெறாத அரச ஊழியர்கள் அனைவருக்கும் 1996 சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் இடைக்காலப்படியாக ரூபா.100/- கொடுப்பனவு செய்ய வேண்டியதுடன் 1996 ஜூலை 01 ஆந் திகதி தொடக்கம் இவ் இடைக்காலப் படி ரூபா.250/- ஆக வேண்டும்.

02. இந்தக் கொடுப்பனவு அமய/பதில்டு மற்றும் நாட் சம்பளம் பெறும் ஊழியர்கள் எல்லோருக்கும் அவர்கள் வேலை செய்த நாட்களின்படி மாதமொன்றுக்கு ஆகக் கூடிய 21 நாட்களை அடிப்படையாகக் கொண்டு சம விகிதாசாரப் படி கொடுப்பனவு செய்ய வேண்டும்.

03. அரச ஊழியர்களுக்கு இந்தப் படி வழங்கப்பட்டதை அடிப்படையாகக் கொண்டே உள்ளூராட்சி ஊழியர்களுக்கும் இது கொடுப்பனவு செய்யப்பட வேண்டும்.

04. இத் திட்டத்தை செயற்படுத்துவதற்காக வேண்டிய நிதி ஒதுக்கீடு வாழ்க்கைச் செலவுப்படி செலவுக் குறியீட்டின் கீழ் பெற முடியாதவிடத்து, மீண்டுவருஞ் செலவுக் குறியீடுகளின் மிகுதிகளினால் வீரமொன் நடைமுறையை கடைப்பிடித்துக் கொண்டு அதை பெறுதல் வேண்டும். இம் முறையினால் நிதி பெற முடியாதிருப்பின் மட்டும் மேலதிக நிதி ஏற்பட்ட முறையை குறிப்பிட்டு மேலதிக நிதிக்கான விண்ணப்பமொன்றை வரவு செலவுப் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.

05. இந்தச் சுற்றறிக்கை திறைசேரியின் ஒத்திசைவுடன் வெளியிடப்பட்டது.

ஒப்பம்: வை.பி.புன்செதெனிய.
பதில் செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற